DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 42 /2017

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | :Ayyanan | Father/Husband Name:Subramanian | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : S.I. (Rtd.) |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று உசிலம்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 08.02.13ம் தேதி மேலூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றையதினம் 16.30 மணிக்கு நிலைய பொறுப்பிலிருந்தபோது சாமிநாதன் மனைவி அந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.78-13 இதச பிரிவுகள் 294(பி). 323, 354 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புசட்டத்தின்படி ஆக முதல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கயின் அசலையும், கனம் மேலூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் 17 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் த-பெ ராஜு மற்றும் முருகன் த-பெ. பூவலிங்கம் ஆகியோர்கள் முன்னிலயில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

அந்த பார்வைமகஜரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அ்னறையதினமே இவ்வழக்கின் சாட்சிகளான அந்தி, அழகம்மாள், மதுரைச்சாமி, சின்னப்பொன்னு, முருகன் த-பெ ராஜு மற்றும் முருகன் த-பெ. பூவலிங்கம் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவங்கள் உண்மைய என தெரியவரவே வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுத்தபோது இவ்வழக்கின் எதிரிகளான போதும்பொன்னு மற்றும் அம்மாசி ஆகியோர்களை அன்றையதினம் 18.40 மணிக்கு நரசிங்கம்பட்டி பஸ் ஸ்டாப்பில் வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற

காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் எனது முதல்நிலை விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் முருகேசன் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுவது 08.02.13 அன்று காலை 7 மணிக்கு என்றால் சரிதான். சம்பவ இடம் மேலூர் காவல் நிலையத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவு இருக்கும். அதிகபட்சமாக சம்பவ இடத்திலிருந்த காவல் நிலையம் செல்வதற்கு அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுவதிலிருந்து சுமார் 10 மணி நேரம் காலதாமதமாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயத்தை பற்றி எனது விசாரணையில் எதுவும் சொன்னாரா என்றால் தனியார் மருத்துவமனைக்கு சென்று ஊசி போட்டுவிட்டு வந்து புகார்கொடுத்ததாக சொன்னார். அ.சா.1 எந்த மருத்துவமனியல் அவ்வாறு தனது காயத்திற்கு ஊசி போட்டுக்கொண்டார் என்று சொல்லவில்லை என்றாலும், அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்திற்கு காயச்சான்று எதுவும் நான் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

அ.சா.ஆ.4 வரைபடத்தில் காணப்படும் சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள வீட்டுக்காரர்கள் மரகதசாமி, பாண்டி, ஆறுமுகம், சொக்கர், சோமகிரி ஆகியோர்களில் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். புகாரில் வாதிதரப்பிற்கும் எதிரிகள் தரப்பிற்கும் கழிவுநீர் செல்வதில் தகராறு உள்ளதாக தெரிவித்தனர் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் எனது விசாரணையில் அவ்வாறு கழிவுநீர் செல்லக்கூடும் பாதை பொதுப்பாதை என்று நான் தெரிந்துகொண்டேன்.

வாதி, எதிரிகளுக்கிடையே ஏற்கனவே இருந்த முன்பகை காரணத்தை வைத்து ஜோடிக்கப்பட்ட புகாரை காவல் நிலையத்தில் கொடுத்து அதை நான் பெற்றுக்கொண்டு சம்பவ இடம் சென்று முறையாக விசாரணை செய்யாமல் வழக்காவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து விசாரணைக்காக காவல் நிலையததில் ஆஜராகி இருந்த 2 மற்றும் 3 எதிரிகளை கைது செய்து இந்த குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.